**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்கு 2017–2018ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகைக்கு ஒரு ஜதை வேட்டி–சட்டை மற்றும் புடவை–இரவிக்கைத் துணி வழங்கியது – சரக்கு மற்றும் சேவை கட்டண வரியாக (GST) ரூ.16,267/– கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தியது – பின்னேற்பாணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (டி) எண்: 47**

**நாள்: 08.06.2018**
**விளம்பி – வைகாசி, 25**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (D) எண் 57, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–1)த் துறை, நாள் 08.08.2017.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க. எண் 313/ம.இ.நிர்–3/2017, நாள் 30.11.2017 மற்றும் 03.05.2018.

------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2017ஆம் ஆண்டு தீபாவளி தினத்தன்று 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 910 (ஆண்கள்–462, பெண்கள்–448) இல்லவாசிகளுக்கு வேட்டி–சட்டை மற்றும் புடவை–இரவிக்கை வாங்கி வழங்கிட ரூ.3,25,332/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மேலே பத்தி–1ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் ரூ.3,25,332/–க்கு மட்டும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது எனவும், இத்தொகைக்கு 5% GST தொகையினைச் சேர்த்து (ரூ.16,267/–) மொத்தம் ரூ.3,41,599/– கோ–ஆப்டெக்ஸால் கோரப்பட்டு தொகை முழுவதும் செலுத்தப்பட்டு விட்டதாகவும் தெரிவித்துள்ளார். 2017–18ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்ட கணக்குத் தலைப்பில் ரூ.5,02,000/– நிதி ஒதுக்கீடு உள்ளதால், கூடுதலாக 5% GST தொகையான ரூ.16,267/–ஐ கோ–ஆப்டெக்ஸிற்கு செலுத்தப்பட்ட தனது செயலுக்கு பின்னேற்பு வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

4. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்கு 2017–2018ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகைக்கு ஒரு இணை வேட்டி–சட்டை மற்றும் புடவை–இரவிக்கைத் துணி வாங்கி வழங்கியதற்கான செலவினத் தொகை ரூ.3,25,332/–க்கு, 5% GST தொகையாக ரூ.16,267/– கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு செலுத்திய மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் செயலுக்கு பின்னேற்பாணை வழங்கி ஆணையிடுகிறது.

(த.பி.பா.)

**5.** இனிவருங்காலங்களில் கருத்துருக்களை அரசுக்கு அனுப்பும்போது, சரக்கு மற்றும் சேவை வரிகளையும் சேர்த்து நிதி ஒப்பளிப்பு கோருமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

**6.** இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் **26569**/நிதி(சந)/**2018**, நாள் **06.06.2018**–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–**5.**
மாநிலக் கணக்காயர், சென்னை–**18.**
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–**35.**

**நகல்:**

நிதித் (ச.ந.) துறை, சென்னை–**9.**
அரசுச் செயலரின் முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–**9**
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–**9.**
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.